1968 மார்ச் 30]

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இந்தக் கார்ப்பரேஷன் அமைப்பில் என்ஜினியரிங் தொழில் மட்டும்தான் வந்திருக்கிறது. மற்ற ஃபாக்டரிகள், தச்சுத் தொழில்கள் போன்ற தொழில்கள் எல்லாம் இருக்கின்றன இவைகளுக்கு எல்லாம் இப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்க உத்தேசம் உண்டா ? அப்படி அமைப்பதன் நோக்கம் லாபகரமான வியாபார நோக்கமா அல்லது வேறு ஏதாவது நோக்கமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு தொழில்களில் எஞ்சினியரிங் தொழில் மட்டுமல்ல, தச்சுத் தொழில் மற்றவைகள் எல்லாம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்ற அளவில் வருகிற 67 தொழில்கள் 1-12-1965 வரை எடுத்துக்கொள்ளப்பட்டன. வணிக நோக்கத்தின் அடிப்படையில் அதிக வருமானம் தேடித்தரும் வகையில் தனிக் கார்ப்பரேஷனை அமைக்கப்பட்டது. இதில் பணி செய்கிற நோக்கத்தோடு சிலபல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதன் குறிப்பைத்தான் தொழில் மானியக் கோரிக்கை மீது பேசும்போது கிட்டத்தட்ட 23, 24 யூனிட்கள் பணி நோக்கத்தின் அடிப்படையில் வைத்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் அவற்றில் நாம் அதிகமான லாபத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் கூறினேன். லாபத்தை அதிகமாக்கும் நோக்கத்தின் அடிப்படையில்தான் தொழில் கார்ப்பரேஷன் அமைக்கப்படுகிறது.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரத்தில் 60 துணை வினாக்களுக்குத்தான் பதில் சொல்ல முடியும். எனவே, ஒரே உறுப்பினருக்குப் பல துணை வினாக்கள் அனுமதிக்க நேரம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், என் கேள்வி கார்ப்பரேஷன் அமைப்பதற்கு முன்னால் எந்த அளவு உற்பத்தி இருந்ததோ அதைவிட கார்ப்பரேஷன் அமைத்ததற்குப் பிறகு குறைந்துவிட்டது, திறமை குறைந்துவிட்டது என்பதுதான். வருஷா வருஷம் எந்த அளவுக்கு உற்பத்தி இருக்கிறது என்பது பற்றி மட்டும் அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள். அப்படி உற்பத்தி குறைந்திருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரக்குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

பாலங்கள்

* 364 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்துக்கு மேற்கே 2 மைலில் உள்ள கண்டுகுளத்துக்கு அருகே உள்ள ரோட்டின் குறுக்காக மிகக் குறுகலாக உள்ள பாலத்தை அகலப்படுத்திக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ரோட்டின் இடையில் ஜிக்-ஸாக் என்று சொல்வது போன்று இரட்டை வளைவு உள்ள பாலமாக அமைந்திருப்பதால், அநேகம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இனிமேலாவது முயற்சி எடுத்து அதைச் சரி செய்ய உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் வேலை எடுக்கப்படவில்லை. ஆகவே, எந்த முயற்சியும் இப்போது எடுப்பதற்கு இல்லை.

* 365 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have decided to widen the narrow bridge across the Kodamuratti river on the Tiruchirappalli-Coimbatore Highway; and

(b) if so, what is its estimate and when it would be taken up for execution?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையின் 0/7-8 மைலில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) ஒப்பந்தக்காரர் இவ்வேலைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டார். அவர் இந்த வேலையைச் சிறிது காலத்தில் தொடங்குவார்.

திரு. கே. விநயகம் : இந்த வேலைக்கு எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது, எவ்வளவு நாட்களுக்குள் இந்த வேலையை முடித்து பொதுமக்களின் உபயோகத்துக்காக இந்தப் பாலத்தைத் தரமுடியும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக 8 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் இது வரையில் அந்த வேலை ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. 1967-ல் இந்த வேலைக்கான மதிப்பீடுகள் எல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டு இப்போது வேலை தொடங்குகிற நிலையில் இருக்கிறது.

* 366 Q.—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal to put up a bridge across Manakudy lake linking Kanyakumari–Kovalam road and Kottar–Manakudy road; and

(b) if so, the estimated cost of the work and when it will be taken up for execution?